**செய்தி வெளியீடு எண்:1151** **நாள்:19.11.2021**

## செய்தி வெளியீடு

இன்று (19.11.2021) சென்னை தியாகராய நகரில் உள்ள காமராஜ் நினைவு இல்லத்தை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் N.எழிலன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

**இதனைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை, காமராஜர் இல்லத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வசித்த இல்லத்தை இன்றைக்கு பார்வையிட்டிருக்கிறோம். இங்கே அரசின் சார்பில் எடுக்கக்கூடிய பராமரிப்புப் பணிகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. ஏற்கனவே இந்த நினைவு இல்ல பராமரிப்புப் பணிகளுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, துறையின் சார்பாக ரூபாய் 7.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இன்னும் என்னென்ன பணிகள் செய்யவேண்டும், எந்த அளவுக்கு நினைவு இல்லத்தைப் பாதுகாக்க முடியும் என்கிற வகையிலே ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வாழ்ந்த இந்த இல்லத்தை தமிழக அரசு முறையாக, சிறப்பாக பராமரிக்கின்ற வகையிலேதான் இன்றைக்கு இங்கு ஆய்வு செய்திருக்கிறோம். அந்த வகையில், தொடர்ந்து இன்னும் செய்யவேண்டிய பணிகள், எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காகத்தான் இன்றைக்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**கேள்வி:** என்ன பணிகளை மேற்கொள்ளப்போகிறீர்கள்?

**பதில்:** இந்தக் கட்டடம் கட்டப்பட்டு நீண்டகாலம் ஆகிவிட்டதால், இதன் உள்பகுதியின் மேற்கூரைகள் எல்லாம் சிறிது சிதிலமடைந்திருக்கிறது. அதையெல்லாம் சரிசெய்து, அதற்கான வர்ணம் பூசுகின்ற பணிகள் மேற்கொள்ளப்படும். முதற்கட்டமாக

இப்பணிகளை மேற்கொள்ள ரூபாய் 7.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வில்லத்தில் மேலும் பல்வேறு பணிகள் செய்யவேண்டியிருக்கிறது என்பது ஆய்வின்போது அறியப்பட்டது. இப்பணிகள் குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசி அதற்குரிய நிதியைப் பெற்று, தொடர்ந்து இதுபோன்ற மழைக்காலங்களில் நினைவு இல்ல கட்டடங்கள் பழுதடையாத வகையில் அதைப் பேணிப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகள் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும்.

**கேள்வி:** தமிழகத்தில் பல்வேறு நினைவு இல்லங்கள் சிதிலம் அடைந்திருக்கின்றன, அனைத்தும் புனரமைக்கப்படுமா?

**பதில்:** ஒவ்வொரு பகுதிக்கும் விரைவாக Nodal அலுவலர் என்கிற வகையில் துறையின் சார்பில் இரண்டொரு நாட்களில் உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட இருக்கிறார்கள். அவர்கள் அந்தந்தப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து அவர்கள் அளிக்கும் அறிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று துறையின் சார்பில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்த நினைவு இல்லத்தில் பொக்கிஷமாக இருக்கக்கூடிய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், அரசியல் வாழ்க்கையில் மேற்கொண்ட பணிகள் குறித்த புகைப்படங்கள், முதலமைச்சராக இருந்தபோது ஆற்றிய பணிகள் குறித்த புகைப்படங்கள், முக்கியத் தலைவர்களை அவர் சந்தித்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் அவரை முக்கியத் தலைவர்கள் சந்தித்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களைப் புதுப்பித்து, பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். புகைப்படங்களை எல்லாம் புதுப்பிப்பதன் மூலம், இன்றைய இளைஞர் சமுதாயம் அவருடைய வாழ்க்கை வரலாற்றை தெள்ளத்தெளிவாக தெரிந்துகொண்டு பயன்பெற இயலும்.

**கேள்வி:** சென்னையில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பிலிருந்து கோரிக்கை வந்திருக்கிறதே?

**பதில்:** ஏற்கனவே முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு சிலை அமைக்கப்பட்டு ஆண்டுதோறும் அவரது பிறந்தநாளன்று தமிழக அரசால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது, சென்னையில் நினைவு மண்டபம் அமைப்பதற்கு பரிசீலிக்கப்படும்.

**கேள்வி**: இப்போது எடுக்கப்படும் திரைப்படங்கள் ஒரு தரப்பை சார்ந்தோரின் சாதியை குறிக்கும் விதமாக எடுக்கப்பட்டால், உங்கள் துறையின் சார்பாக எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படும்?

**பதில்:** அதற்கு தனியாக ஒரு தணிக்கைக் குழு (Censor Board) இருக்கிறது, அத்தணிக்கைக் குழு மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது, அது அவர்களுடைய முடிவுதான்.

- - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**